# அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் அண்ணாவின் பெயரை மாற்றுவது என்ன நியாயம்?

## பேரவையில் முன்னாள் அமைச்சர் இ.பெரியசாமி உரை... 5ஆம் பக்கத் தொடர்ச்சி

ஏன்னா, கலைஞருடைய கனவில்லத்துல வந்து இன்றைக்கு மக்கள் ஆசையா வாங்குனாங்க. எல்லாப் பேரும் இன்றைக்கு வீடு கட்டியிருக்காங்க, போய் பாருங்க. அவர் சொன்னாரு, பேஸ்மெண்ட்... இப்ப மூணாவது தடவை கொடுத்ததுல பேஸ்மெண்ட் போட்டுருப்பாங்க. கட்டுமானப் பணிகள் நடந்துகிட்டு இருக்கும். நீங்கள் அதை வைத்துச் சொல்லக்கூடாது. நான் குறை சொல்வதற்காகச் சொல்ல... நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை... ஏற்றுக்கொள்ளவில்லை.

ஒரு வீடு அலாட்மென்ட்ன்னு நம்ம நிர்வாக அனுமதி கொடுத்துவிட்டாலே, அவங்க வந்து பேஸ்மெண்ட் கூட போட்டுருப்பாங்க, அதிகாரிகள் போய் பார்க்கையில. ஆனால், அதை முடிவு செய்வது அங்கங்க இருக்கக்கூடிய பிளாக் டெவலப்மென்ட் ஆபீசர்ஸ்தான்... வட்டார வளர்ச்சி அவங்க அலுவலர்கள்தான் அதை முடிவு செய்வார்கள்.

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்!

இதேபோல, இப்பொழுது நீங்கள் வந்து அண்ணா மறுமலர்ச்சி திட்டம் இருக்கு. அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தைப் பொறுத்த மட்டில், முத்தமிழறிஞர் கலைஞர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்துல நம்முடைய கிராமங்கள்ல இருக்கக்கூடிய உள்கட்டமைப்பு வசதிகளை உயர்த்துவதற்கும், கிராமம் சுத்தமான, சுகாதாரமான, நல்ல வளமான கிராமமாக உருவாக வேண்டும் என்பதற்காகக் கொண்டுவரப்பட்ட திட்டம் அண்ணா மறுமலர்ச்சி திட்டம்.

அது எங்களுக்கு... இப்ப இன்னைக்கு முன்னாள் முதலமைச்சர் தளபதி அவர்கள் 2006-ல துணை முதலமைச்சராக இருந்தபொழுது, அவர்கள் இதையெல்லாம் வந்து தொடர்ந்து இந்தத் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்பதிலெல்லாம் ஆர்வம் உள்ளவர். ஏன்னா சுயஉதவிக் குழுவில் இருந்து எல்லாம். அதைத் தொடர்ந்து இப்ப என்ன செஞ்சாங்க வந்தவுடனே? மீண்டும் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து, அதுல வந்து இன்னைக்கு... இன்னைக்கு வச்சு... நீங்க என்ன செஞ்சிருக்கீங்க, அதனுடைய பெயரை மாற்றியிருக்கிறீர்கள்.

அண்ணாவுடைய பெயரையே மாற்றி... அது என்ன நியாயம்? நீங்க சொல்றீங்க, கொள்கைத் தலைவர்கள்ன்னு நேசிப்பதாகச் சொல்கிறீர்கள். அண்ணாவின் பெயர் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ‘தமிழ்நாடு’ என்று சட்டம் கொண்டுவந்த அண்ணாவின் பெயரையே எடுத்த பெருமை... அதிலும் நீங்க வந்து மறுமலர்ச்சி... என்னன்னா TN VETRI — மறுமலர்ச்சி வாழ்... வளர்ச்சி வாழ்வாதார திட்டமாம். நீங்க மாற்றியிருக்கீங்க.

இது எதுக்கு மாற்றணும்? அண்ணாவுடைய பெயர் இருந்தா இருந்துட்டுப் போகுது, உங்களுக்கு என்ன? அண்ணா கடவுள் மாதிரி, அவர் பெயர் இருந்தா இருந்துட்டுப் போகுது. கட்சியில் தான் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், அண்ணாவைப் பிடிக்கலைன்னா... அண்ணானாலதான் இன்னைக்கு... இன்னைக்கு இந்த கட்சியெல்லாம் ஆட்சிக்கு வந்திருக்கு. சாதாரண சாமானியர்களெல்லாம் சட்டமன்றத்திற்கு வருவதற்கு வழிகாட்டி பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அதைத் தொடர்ந்து இந்த இதுல வந்து திட்டத்துல நீங்க பார்த்தீங்கன்னா, நீங்க உங்களுடைய இப்ப உங்களுடைய நிதிநிலை அறிக்கையில நான் படித்தேன். என்னவென்றால், நீங்க 6,000 கோடி அதுக்கு ஒதுக்கியிருக்கீங்க. 6,000 கோடி ஒதுக்கி, அதுல வந்து எதுக்கு வந்து Periarban-க்கு... அதாவது பெரிய நகரங்களைச் சுற்றி இருக்கின்ற கிராம பஞ்சாயத்துகளுக்கு ஒரு 1,000 கோடி சாலை வசதிகள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒரு 1,000 கோடி ஒதுக்கியிருக்கீங்க. இதுபோக மலைப்பகுதியில் இருக்கின்ற கிராமங்களுக்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கி யிருக்கிறீர்கள்.

### மலைப் பகுதிச் சாலைகள்!

எங்கள் ஆட்சியிலே, கடந்த ஆட்சியிலே, மலையில் இருக்கின்ற கிராமங்கள் அத்தனை கிராமங்களுக்கும் முதலமைச்சர் சாலைத் திட்டத்திலே மட்டுமல்லாமல் பல்வேறு திட்டங்களிலே மலையை வந்து... நீங்க நாமக்கல்ல பார்த்தீங்கன்னா, நாங்க வந்து போதமலைக்கே 130 கோடி ரூபாய்ல இன்றைக்குச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு அமைச்சருக்குத் தெரியும், அந்த மாவட்டத்தினுடைய அமைச்சருக்கு. போதமலைக்கு 130 கோடி கொடுத்திருக்கோம், கல்வராயன் மலைக்கு 60 கோடி கொடுத்திருக்கோம்.

இப்படி ஒவ்வொரு மலைப்பகுதியில் இருக்கக்கூடிய அத்தனை சாலைகளையும் இணைக்கின்ற பணியை முடித்து, ஒரே ஒரு அஞ்சு சாலைகள் மட்டும்தான் மலைப்பகுதியிலே — நீலகிரி மலையாக இருந்தாலும் சரி அல்லது இருக்கக்கூடிய நம்ம இருக்கிற ஏற்காடாக இருந்தாலும் சரி அல்லது கொடைக்கானல் மலைப்பகுதிகளாக இருந்தாலும் சரி, மேகமலைப் பகுதிகளாக... இப்ப போராட்டம் நடக்குதே, அந்த மலைப்பகுதியிலே சாலைகள் அமைத்திருக்கிறோம். இப்ப வோலியர் சொல்றாங்களே, அதிலே சாலை அமைத்த ஆட்சி எங்களுடைய ஆட்சி!

அனுமதி கொடுத்திருக்கிறது இது வனத்துறை. ஒரு ஐந்தே ஐந்து சாலைகளுக்கு மட்டும் தான் வனத்துறை அனுமதி கொடுக்காமல் இருக்கிறது. எங்கள் ஆட்சிக் காலத்திலே அத்தனை மலைப்பகுதிகளுக்கும் நாங்கள் சாலைகளை அமைத்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், நம்ம அவங்க வந்து அதற்காக 100 கோடி ஒதுக்கியிருக்காங்க. அந்த அஞ்சு சாலைகளுக்கு மட்டுமல்லாமல் இன்னும் வளர்ச்சிக்குப் பயன்படுத்தலாம், அதைப்பற்றி ஒன்னுமில்லை.

ஆனால், அண்ணாவின் பெயரை மாற்றியதுதான் மிக வருத்தமாக இருக்கிறது. எதற்காக அண்ணாவின் பெயரை மாற்றி ‘தமிழ்நாடு வெற்றி’ — VETRI-னா Village Empowerment, Transformation and Revitalizing Initiative என்று சொல்லி யிருக்கிறார்கள். நீங்க அதை வச்சுக்கோங்க, கொள்கையா வேணும்னா வச்சுக்கலாம் அந்த அப்ரிவியேஷனை.

ஆனால், என்னை பொறுத்தவரையில் என்ன சொல்லுகிறேன் என்றால், திட்டத்திற்காக நிதி என்ன ஒதுக்கியிருக்கிறது என்றால் ஒரு 7,100 கோடி ஒதுக்கியிருக்கீங்க. எங்களுடைய ஆட்சிக் காலத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால்,

முதல் ஆண்டிலேயே ஒரு லட்சம் வீடு கட்டி முடிச்சுட்டோம். இரண்டாவது ஆண்டிலேயே கிட்டத்தட்ட 80% பணிகள் முடிவடைந்துவிட்டது, நீங்கள் பார்க்கலாம். 80%... கிட்டத்தட்ட 80,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

இப்ப, நாங்க அறிவிச்சது 26-ல் ஒரு லட்சம் வீடு அறிவிச்சோம். நீங்க அதைத்தான் பார்த்திருக்கீங்க. பவுண்டேசன் நாங்க அறிவிச்சதுனால, அதுல பயன்... பயன்பெறக் கூடியவர்கள் அவர்கள் பவுண்டேசன் போட்டவுடனே முதல் தவணைய வழங்குவோம். பவுண்டேசன் போட்டவுடனே முதல் தவணை வழங்குவோம். லிஃப்ட்க்கு... அதாவது வந்து இருக்கக்கூடிய லிண்டலுக்கு வந்தவுடனே இரண்டாவது தவணை வழங்குவோம். மூணாவது தவணை நீங்க சென்ட்ரிங் போட்டவுடனே கொடுப்போம். நாலாவது தவணை அதை முழுமையாக முடித்த பின்பு நான்காவது தவணை வழங்குவோம்.

இந்த 3.5 லட்சம்ங்கறது 360 sq.ft-ல் கட்டுறோம். நீங்க பழைய வீடுகளாம் 200 sq.ft, 210 sq.ft தான். நாங்க வந்து வீடு கட்டும் திட்டத்தில் 5-தான். 3.5 லட்சத்துல கட்ட முடியும் என்பது தான் இந்த திட்டம் திட்டடப்பட்டது அன்றைக்கு. அன்றைக்கு விலைவாசிகள் இன்றைக்கு இருக்க விலைவாசிகளை விட 20% குறைவாக இருந்தது.

அதனாலதான் நாங்க சொன்னோம். இப்ப நீங்க கட்டுறதுல இன்னைக்கு 20% கூடியிருக்கு. நீங்க 5 லட்சம் ஒதுக்கீடு செய்தாலும், அவர்களுக்கு இன்றைக்கு 20%-த்திற்கு மேல் இன்னைக்கு கட்டுமானப் பணிகள் கடுமையாக உயர்ந்திருக்கிறது. நாங்க என்ன செஞ்சோம்? எங்க ஆட்சி காலத்துல இந்த வீடு கட்டுவதற்கு முன்னாலயே, TANCEM-ல் அரசுடைய சிமெண்ட் பேக்ட்ரில இருந்து கன்செசன் விலையில, விலை குறைவாக, வீடு கட்டுகின்றவர்களுக்கு 140 மூடைகள் சிமெண்ட் வழங்கப்பட்டது.

அதேமாதிரி மாவட்ட அளவில் வந்து, நீங்க கொள்முதல் செய்வதற்கு எது குறைந்த விலையோ, அதுல கம்பி 340 கிலோ கம்பி வாங்கிக்கொள்ளலாம்னு உத்தரவிட்டோம். அன்னைக் பார்த்தீங்கன்னா M-sand எல்லாம் பார்த்தீங்கன்னா 2,000 இருந்துச்சு. நான் முதல் வருஷம் 1 லட்சம் வீடு கொடுக்றப்ப 2,000 இருந்துச்சு. இன்னைக்கு 4,500, 5,000. நினைக்கிற அளவுக்கு விக்கிறாங்க. மைன்ஸ் டிபார்ட்மென்ட்ல இப்ப பார்த்தீங்கன்னா ஜல்லியும், ஜல்லி... இருக்கக்கூடிய கட்டுமானப் பணிகள் எதுவாக இருந்தாலும், இன்னைக்கு முழுக்க முழுக்க விலை ஏற்றம் 20%, 25% உயர்ந்திருக்கு.

அப்ப 20% உயர்ந்துச்சுன்னா நீங்க 1 லட்சம் மைனஸ் தான் இன்னைக்கு. ஏன்னா, நம்முடைய குறிக்கோள் நிறைவேறணும். நீங்க வெற்றி திட்டத்திற்கு பெயர், ‘வெற்றி வீடு கட்டும் திட்டம்’ என்று...

நான் இப்பவே சொல்றேன். பிரதமர் வீடு கட்டும் திட்டத்துல நீங்களே ஒரு 80,000 வீட பேஸ்புக் மட்டும் இல்லை, வீட இடமே இல்லாம விட்டுப் போனீங்க. எங்கள் ஆட்சி வந்து நாங்க கிட்டத்தட்ட எல்லா வீடுகளையும், எங்கெங்க பிரதமர் வீடு கட்டும் திட்டத்துல கட்டாம இருக்கோ, அத்தனை வீடுகளையும் எங்கள் முதலமைச்சர் அவர்கள்... ஏன்னா, 40% தான் நாங்க கொடுக்கணும். ஆனா, வீட்டுக்கு வந்து அவங்க ஒதுக்குனது 1.08 லட்சம் தான். நாங்க 2.75 லட்சம் கொடுத்து, 2.90 லட்சம் கொடுத்து, 62% ஒரு வீட்டிற்கு கொடுத்து, ஒன்றிய அரசு கொடுத்தது 38% தான். 60% கொடுக்கணும், ஆனால் ஒன்றிய அரசு கொடுத்தது 38% தான்.

ஆனால் இன்றைக்கு, எங்களுக்கு பல்வேறு முரண்பாடுகள் பாரதிய ஜனதா கட்சியோடு முரண்பாடு இருந்தாலும், வீடு பெறுகின்ற பயனாளிகள் தமிழர்கள். அதனால், நாங்கள் அவர்களுக்கு வழங்கிய அந்த திட்டங்களை முடித்துக் கொடுத்திருக்கிறோம். நேற்றுக்கூட நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ‘பசுமை வீட நீங்க பேரை மாத்திட்டீங்க, கலைஞர் கனவு இல்லம்னு மாத்திட்டீங்க’னாங்க.

### பசுமை வீடே கட்டவில்லை!

நான் என்ன சொல்றேன், நாங்க பேர் மாற்ற வேலை எங்களுக்கு இல்லை. நீங்க பூராத்துக்கும் பேர் மாற்றிருக்கீங்க, வரிசையா சொல்றேன். ஆனால் நாங்கள் சொல்வது என்னவென்றால், ‘பசுமை வீடு’ என்று அறிவித்தார்கள், அந்த அம்மையார் அவர்கள். ஜெயலலிதா அம்மையார் அவர்கள் அறிவித்தார்கள். அவர்கள் மறைவிற்குப் பின்னால், 17-18, 18-19-ல் பசுமை வீடே கட்டல. தமிழ்நாட்டில் அதற்கு எந்த திட்டமும் போடல.

தேர்தல் வரப்போகுது 21-ல் உடனே, 19-20, 20-21-ல் அந்த வீடு கட்டும் திட்டத்தை, அறிவித்த திட்டங்களை ஆரம்பித்தார்கள். ஆரம்பிச்சு பாதியில விட்டுட்டு போயிட்டாங்க. நான் உடனே முதலமைச்சரிடத்தில் சென்று, பசுமை வீடு கட்டும் திட்டம்... வீடு கட்டும் திட்டம், அது அப்படியே நிக்குது. அந்த திட்டத்திற்கு நாம் பணம் ஒதுக்கி கட்டலாமா, வேண்டாமா என்று கேட்டேன்.

எங்கள் தலைவர் சொன்னார், வாக்களித்தவர்களுக்கும் சரி, வாக்களிக்காத வர்களுக்கும் உதவி செய்கின்ற அரசு தான் என்னுடைய அரசு. நீங்கள் அந்த பசுமை வீடு கட்டும் திட்டத்தைக் கட்டி முடித்து விடுங்கள், அதற்கு நிதி கொடுக்கிறேன் என்று, பசுமை வீடு கட்டும் திட்டத்தை முடித்தவர் எங்கள் தலைவர், தளபதி அவர்கள் என்பதை நான் இங்கே நினைவூட்ட விரும்புகின்றேன்.

இதுபோக வீடு கட்டும் திட்டத்திலே, இப்ப பல்வேறு நிலையிலே இருக்கக்கூடிய இந்த வீடு கட்டும் திட்டம், இன்னைக்கு 8 லட்சம் வீடுகள் நாங்கள் கணக்கெடுத்தோம்.

நான் இரண்டே இரண்டு விஷயம் மட்டும் நான் சொல்லிடுறேன். இதுல ரொம்ப முக்கியமா, இந்த மாவட்ட விஷயத்தை ஒரே விஷயம் சொல்லிடுறேன். எங்களுடைய மாவட்டத்திலே வைகையிலிருந்து கூட்டுக்குடிநீர் திட்டம், அதற்குரிய அனைத்து ‘டிடெய்ல்டு பிராஜெக்ட் ரிப்போர்ட்’ (DPR) தயார் செய்யப்பட்டு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அந்த பணி இருக்கு.

இப்ப கடுமையான வறட்சி நிலக்கோட்டை தொகுதி, ஆத்தூர் தொகுதி, திண்டுக்கல் தொகுதி... கடுமையான, ஒரு சொட்டுத் தண்ணீர் இல்லாமல், சின்னாளபட்டியில ஒரு சொட்டுத் தண்ணீர் இல்லை, சின்னாளபட்டி பேரூராட்சியில. என்னுடைய தொகுதியில, நான் இல்லை என்று மறுக்க முடியாது. ஏனென்றால், அத்தனை அணைகளும், காமராஜர் சாகர் அணை, குடிநீருக்காக கட்டப்பட்ட அணை வறண்டுவிட்டது. இப்ப ஒரு சொட்டுத் தண்ணீர் இல்லை.

எங்களுக்கு 32 கிலோமீட்டர் எங்க ஊரை தாண்டித்தான் வைகை போகுது. நாங்க வந்து மதுரைக்கு போகுது, எல்லா ஊருக்கும் போகுது, தெற்க இருக்க ஊருக்கெல்லாம். ஆனா, எங்களுக்கு அந்த திட்டம் தீட்டப்பட்டு, அது நிலுவையில் இருக்கிறது. அந்த திட்டம் கண்டிப்பாக, எவ்வளவோ கோடியில 600 கோடியில திட்டம் தீட்டப்பட்டிருக்கு. அது நிறைவேற்றப்பட வேண்டும்.

இதுல ரொம்ப முக்கியமா, ஜூலை மாசம் பார்த்தீங்கன்னா, இந்திய அளவிலே இந்த வி.பி.ஜி. ராம்ஜி திட்டம் மிக சரிவான நிலையிலே இருக்கிறது.

தமிழகத்துல கூட 71 லட்சம் பேருக்குத்தான் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறதாக ஒரு மாத காலத்தில் 71 லட்சம்...

கடந்த ஆண்டை ஒப்பிட்டுப் பார்த்தால் 2 கோடியே 41 லட்சம் பேருக்கு மகாத்மா காந்தி வேலை உறுதி அளிப்பு திட்டத்திலே வழங்கப்பட்டிருக்கிறது.

இதனுடைய தொடர்ச்சியாக நாம் பார்க்கின்ற பொழுது, இந்த மகளிர் மேம்பாட்டு திட்டத்தைப் பொறுத்தவரையில், இதுல வந்து 1 லட்சம் கோடி... 1 லட்சம் கோடி கடன் இணைத்திருக்கிறார்கள் எங்களுடைய அரசு.

அதுபோக Skill Development கொண்டு வந்திருக்காங்க. Skill Registry எங்களுடைய முதலமைச்சர் ஒபன் பண்ணியிருக்காங்க.

இதுல அந்த இருக்கக்கூடிய, பெண்கள் பணியாற்றக்கூடிய பெண்களுடைய ஏறத்தாழ 15,000 பேர் அதுல பணி... 15,000 குழுக்களுடைய அந்த Skill திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்றவர்கள் பிளாக் டெவலப்மெண்ட், டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட்ல அளவுல இருக்கக்கூடிய...

அந்த பயன்பாடு... அதுல ஏற்கனவே பணியாற்றி வரக்கூடிய பட்டியலை பதிவு செய்வது, அந்த Skill Registry-ல பதிவு செய்வது என்று திட்டமிட்டு, அதை டிஜிட்டலைஸ்...

அதற்கு பல முயற்சிகள் எடுத்து தடங்கல் ஆயிடுச்சு. நீங்க இருக்க காலத்துல அதை முடிங்க.

இவ்வாறு இ.பெரியசாமி உரையாற்றினார்.

---

### 100 நாட்கள் த.வெ.க. ஆட்சியில் மாணவர்கள் படுகொலைகளால்

# தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துள்ளது!

## திருவொற்றியூர் பொதுக்கூட்டத்தில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேச்சு!

சென்னை, ஆக. 23 –

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் தவெக அரசின் சட்டம் ஒழுங்கு சீர்குலைவை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக் கூட்டம் திருவொற்றியூர் எழுத்துக்காரன் தெருவில் நடைபெற்றது. பகுதி செயலாளர் தி.மு.தனியரசு இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்து வரவேற்புரையாற்றினார். வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் சுதர்சனம் தலைமையுரையாற்றினார் .

இக்கூட்டத்தில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பங்கேற்று சிறப்புரையாற்றினார், அவர் பேசியதாவது.

தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்தபோது இதே இடத்தில் பல பொதுக் கூட்டம் நடைபெற்றது, ஆனால் அப்போதெல்லாம் இல்லாத எழுச்சி திமுக எதிர்க்கட்சியாக உள்ள போது இங்கு நடைபெறுகின்ற இந்த கூட்டத்தில் காண முடிகிறது, நலத்திட்ட உதவிகள் என்ற பெயரில் கூட்டத்தை கூட்டாமல் இக்கூட்டம் வெறும் கொள்கை மறவர்கள் நிறைந்த கூட்டமாக இக்கூட்டம் நடைபெறுகிறது. அதுவும் இரண்டே நாளில் இக்கூட்டம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது,

முதலில் இக்கூட்டத்தை வழக்கறிஞர் அணி மூலம் நடத்தலாம் என்று நினைத்திருந்தோம், ஆனால் தனியரசு நானே நடத்துகிறேன் என்று கூறி இக்கூட்டத்தைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார்.

தி.மு.க.வினரை பற்றி கலைஞர் அவர்கள் சொல்லும் பொழுது ஒரு கருத்தை சொல்லுவார், திமுக காரன் தூங்கினால் கும்பகர்ணன் எழுந்தால் இந்திரஜித் என்பார், அதேபோல் இன்று திமுக தோற்றப் பிறகு தான் திமுகவினர் அனைவரும் இந்திரஜித்தாக வீறுகொண்டு எழுந்துள்ளதை காண முடிகிறது.

அந்த எழுச்சியை நமது இளந்தலைவர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டபோது கண்கூடாக காண முடிந்தது, அவர் கைது செய்யப்பட்ட. ஒரு சில மணி நேரத்திலேயே தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற போராட்டங்களில் சுமார் ஒரு லட்சம் பேர் கைது செய்யப்பட்டனர், ஒவ்வொரு திமுககாரனும் தானாக களத்தில் வந்து நின்றான், கட்சிக்கு மட்டும் அல்ல தமிழ்நாட்டிற்கு ஒரு ஆபத்து என்றாலும் முதல் நாளாக காப்பாற்றுவதற்கு களத்தில் இருப்பது தி.மு.க.காரன் மட்டுமே.

நமது சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது என்பது இந்த மைனாரிட்டி அரசுக்கு பெரிய பின்னடைவு.

சம்பந்தமே இல்லாத பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, அதிகாலையில் இருந்து ஒரு பெரும் போலீஸ் படையே தஞ்சாவூரில் இருந்து புறப்பட்டு உதயநிதி ஸ்டாலின் வீட்டிற்கு வந்து கைது செய்ய முற்பட்டது, உடனே திமுக சட்டத்துறை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தொடர்ந்தது, அவசர வழக்காக எடுத்துக் கொண்ட நீதியரசர்கள் உதயநிதி ஸ்டாலினை 12 மணி வரை கைது செய்யக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்தனர், ஆனால் அந்த உத்தரவையும் மீறி தவெக அரசின் அராஜக போலீசார் உதயநிதியை கைது செய்து தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்றனர்.

வழக்கு விசாரணை மீண்டும் பிற்பகல் 2 மணிக்கு வர இருந்த நிலையில், யாரோ ஒரு மூத்த வழக்கறிஞர் அரசுக்கு அறிவுரைத்ததின் பெயரில் உயர் நீதிமன்றத்தில் அரசின் சார்பில் உதயநிதியை நாங்கள் விசாரித்து அனுப்பி விடுவோம் கைது செய்யவில்லை என்று அறிவிக்கிறார்கள், இது தவெக அரசுக்கு ஏற்பட்ட பெரிய தலைகுனிவாகும் .

உண்மை நிலை எப்படி இருக்க இந்த அரசில் அமைச்சராக உள்ள ஆதவ் அர்ஜுனா கைது செய்ய போலீசார் வந்த பொழுது இரண்டு மணி நேரமாக உதயநிதி வீட்டை விட்டு வரவில்லை என்று ஒரு அப்பட்டமான பொய்யான தகவலை அளிக்கிறார், இது முற்றிலும் அயோக்கியத்தனமான செயலாகும். இதனை நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

த.வெ.க. ஆட்சிப் பொறுப்பேற்று இந்த நூறு நாட்களில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந் துள்ளது, பள்ளி கல்லூரிகளில் மாணவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள், மாணவர்களுக்கு கஞ்சா மற்றும் போதைப் பொருட்கள் எளிதாக கிடைப்பதாக சொல்லப்படுகிறது, இதனை தடுக்க திராணியற்ற அரசு, கடந்த கால தி.மு.க. ஆட்சியை குறை சொல்கிறார்கள், அதற்கு சட்டமன்றத்திலேயே எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி உடனடியாக பதிலடி கொடுத்துள்ளார். கடந்த திமுக ஆட்சி காலத்தில் போதைப் பொருள் தடுப்புத் துறைக்கு தலைவராக இருந்த அமல்ராஜைதான் தற்பொழுது சென்னை மாநகர கமிஷனராக நியமித்துள்ளார்கள்.

அப்படி என்றால் கடந்த காலத்தில் போதை பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் திமுக அரசு திறமையாக செயல்பட்டதை அவர்களை ஒப்புக்கொள்கிறார்கள்.

அதுமட்டுமல்ல இந்த அரசு பொறுப்பேற்று 100 நாட்களில் பல்வேறு குற்ற சம்பவங்கள் தினம் தினம் அரங்கேறி வருகின்றன, குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் இந்த குற்றச்சம்பங்களில் பெரும்பாலானோர் ஈடுபடுவோர் தவெகவை சார்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள், அது மட்டுமல்ல தற்பொழுது காவல் நிலையங்களில் எந்தப் பொறுப்பிலும் இல்லாத த.வெ.க.வினரின் அத்து மீறிய செயல்பாடுகளால் போலீஸ் அதிகாரிகளே குமுறி வருகிறார்கள்.



தற்பொழுது தமிழ்நாடு சட்டமன்ற நடவடிக்கைகளை பார்த்தால் மிகவும் வேடிக்கையாக உள்ளது, நமது சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு துறையின் மீது கேள்வி கேட்டால் அதற்கு சம்பந்தமே இல்லாத ஒரு அமைச்சர் அதற்கு பதில் அளிக்கிறார், தமிழ்நாடு சட்டமன்றத்தின் மரபுத் தெரியாமல் அமைச்சர்கள் உளறுகிறார்கள், இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் ரமேஷ் சட்டமன்றத்தில் ஆணவத்தோடு பேசுகிறார்,

முதல்வர் வரும்பொழுது உதயநிதி எழுந்து நிற்க வேண்டுமாம்,

சபாநாயகர் ஒருவருக்கு மட்டும் தான் எழுந்து நிற்க வேண்டும் என்ற மரபு கூட தெரியாதவர்கள் இவர்கள், அதுமட்டுமல்ல மரியாதை என்பது கேட்டுப் பெறக் கூடாது தானாக கிடைக்க வேண்டும், இதற்கெல்லாம் காரணம் தனது சட்டமன்ற தேர்தலின் போது

தமிழ்நாட்டு மக்கள் தெரியாம வாக்களித்த காரணத்தால், தமிழ்நாடு பல்வேறு தலைகுனிவுகளை சந்தித்துக் கொண்டுள்ளது , தமிழ்நாடு பல்வேறு வகைகளிலும் பின்னடைவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது,

குறிப்பாக திருவொற்றியூரில் நடைபெற்ற மாணவர் கொலை வழக்கில் உரிய நடவடிக்கை எடுக்காத போலீஸ் அதிகாரிகளை கண்டிக்க கூட த.வெ.க. கூட்டணி கட்சிகளுக்கு தைரியம் கிடையாது,

தற்பொழுது முதல்வர் விஜய் தன்னுடன் இருக்கும் எம்.எல்.ஏ.க்களை தக்க வைத்துக் கொள்வதற்காகத் தான் எம்.எல்.ஏ.க்களுக்கு கார் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளார், தமிழ்நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கிறது, அதற்கெல்லாம் நிதி இல்லை என்று கையை விரித்து காட்டும் விஜய்க்கு இத்திட்டத்திற்கு மட்டும் நிதி எப்படி கிடைத்தது,

அதுமட்டுமல்ல நேற்று சட்டமன்றத்தில் முதல்வர் விஜய் சவால் விடுகிறார், நான் பேசினால் என்ன ஆகும் தெரியுமா என்று, என் மேசை மீது மூன்று பைல்கள் உள்ளது, அதைப் பிரித்தால் அவ்வளவு தான் என்று பூச்சாண்டி காட்டுகிறார், இதுபோன்ற எவ்வளவு பூச்சாண்டிகளை, அதாவது கீரிப்பாம்பு மோடி மஸ்தான் வித்தை களையெல்லாம், எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் இருந்தே பார்த்து வந்த இயக்கம் தான் தி.மு.க., தி.மு.க.வை பழி வாங்க வேண்டும் என்பதற்காக எம்.ஜி.ஆர். சர்க்காரியா கமிஷன் என்ற வழக்கை கலைஞர் மீது தொடுத்தார், ஆனால் அதில் ஒன்றுமில்லை என்ற காரணத்திற்காக அவரே திரும்பப் பெற்றார் என்பதெல்லாம் வரலாறு, அது மட்டுமல்ல 2001 இல் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன், தி.மு.க. ஆட்சி காலத்தில் கட்டிய மேம்பாலத்தில் ஊழல் என்று கூறி கலைஞர் அவர்களை இரவோடு இரவாக கைது செய்து சிறையில் அடைத்தார்கள், 25 ஆண்டுகள் ஆகிறது இதுவரை அந்த வழக்கில் எதையும் அவர்களால் நிரூபிக்க முடிய வில்லை, இந்த வரலாறு எல்லாம் நேற்று முளைத்த காளான்களுக்கு தெரிய வாய்ப்பு கிடையாது , இப்பொழுது விஜய் பூச்சாண்டி காட்டுகிறார், நீயும் அந்த மூன்று பைல்களை பிரித்துக் காட்டி முடிந்தால் தி.மு.க. குற்றம் செய்திருந்தால் நிரூபித்துக் காட்டு, நாங்களும் ஊழல் பட்டியலை தயார் செய்து வருகிறோம், கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தி.மு.க. சட்டத்துறை கூட்டத்தில் பேசிய

எங்களது இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் தி.மு.க. வழக்கறிஞர்களுக்கு ஒரு கட்டளை இட்டுள்ளார், ஒவ்வொரு ஊரிலும் ஆட்சியாளர்கள் செய்யும் தவறுகளை ஊழல்களை ஆதாரத்துடன் சேகரிக்க உத்தரவிட்டுள்ளார், இப்பொழுது 10 15 ஊழல் பட்டியல்கள் தயாராகி உள்ளது,

அதில் முதல் ஊழல் முதல்வர் அலுவலகத்தை புணரமைப்பதில் விடப்பட்ட டென்டரில் இருந்து தொடங்குகிறது, இப்பொழுது இருந்து தான் முதலமைச்சருக்கு கெட்ட காலம் தொடங்குகிறது, 1991 ஆம் ஆண்டு ஜெயலலிதா முதல்வராக வந்தவுடன் அரசுக்கு சொந்தமான டான்ஸி நடத்திய வாங்கியதில் கிடுக்கிப்பிடியாக மாட்டிக் கொண்டு தண்டனை பெற்றது போல், தற்போதைய முதலமைச்சர் விஜய்க்கும் அது நிச்சயம் நடக்கும்,

இரண்டாவது ஊழல் பழனி திருக்கோவிலுக்கு சொந்தமான 100 கோடி மதிப்புள்ள நிலத்தை 2 கோடிக்கு பத்திர பதிவு செய்தது தொடர்பான வழக்கில் பிரதான குற்றவாளியும் முக்கிய சாட்சியுமான ஒருவர் சிறையில் மரணமடைந்ததற்கும் இந்த ஆட்சி பதில் சொல்லியே ஆக வேண்டும்,

மூன்றாவதாக இங்கு ஆட்சிக்கு வந்து 100 நாட்களில் 6 உயிர்கள் போலீஸ் கஸ்டடியில் பலியாகி உள்ளது, இதையும் நாங்கள் சும்மா விட மாட்டோம்,

மிக முக்கியமான ஊழலாக கடந்த சில நாட்களுக்கு முன்பு 11 மதுபான கம்பெனிகளுக்கு இந்த அரசு தடை விதித்து உத்தரவு பிறப்பித்தது, ஆனால் 24 மணி நேரத்தில் அந்த உத்தரவு திரும்ப பெறப்பட்டுள்ளது, அப்படி என்றால் திரை மறைவில் நடந்தவை என்ன என்பதை நாங்கள் அம்பலப்படுத்துவோம்,

அதுமட்டுமல்ல அடுத்த ஊழலாக அரசு வக்கீலாக நியமிப்பதில் நடைபெற்ற மெகா ஊழல், இதில் எந்தெந்த பொறுப்பிற்கு எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்ற பட்டியல் எங்களிடம் உள்ளது, இதையும் நாங்கள் சட்டரீதியாக கையாண்டு இந்த அரசின் ஊழலை வெளிச்சத்திற்கு கொண்டு வருவோம்,

75 ஆண்டு கால சரித்திரம் படைத்த திராவிட முன்னேற்றக் கழகத்திடம் சட்டரீதியாக மோதி எவனும் வென்றதாக சரித்திரம் கிடையாது.

தற்பொழுது நடைபெற்று வரும் தவெக அரசு எந்த ஸ்திரத்தன்மையும் இல்லாத , நம்பகத்தன்மை இல்லாத அரசு என்பதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு தொகுதி மறுவரையறை குறித்த விஷ யத்தில் விஜய் அடித்த பல்டி , மெக அந்தர்பல்டி ஆகும். அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தொகுதி மறு வரையறையை எதிர்க்கிறோம் என்று தீர்மானத்தை நிறை வேற்றிவிட்டு, நேற்று அமித்ஷாவை கண்டவுடன் அஞ்சி நடுங்கி நியாயமான மறு வரையறை வேண்டுமென்று அந்தர் பல்டி அடித்துள்ளார், அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத கட்சிகளை எட்டப்பர்கள் என்று கூறிய ராகுல் காந்திக்கு, இப்போது புரிந்து இருக்கும் யார் எட்டப்பர்கள் என்று,

கடந்த சட்டமன்றத் தேர்தலில் நம்மிடம் இருந்து கூட்டணியில் வெற்றி பெற்ற காங்கிரஸ் காரர்கள், வெற்றி பெற்ற உடனே நன்றியை மறந்து பதவி சுகத்திற்கு ஆசைப்பட்டு அணி மாறி அமைச்சர் பதவி ஒட்டிக் கொண்டுள்ள இருவரும் என்னை விமர்சிக்கிறார்கள்,

என்னையெல்லாம் விமர்சிக்க அவர்களுக்கு துளி கூட தகுதி கிடையாது என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள்,

அந்த காலத்தில் காங்கிரஸ்காரர்களை இரண்டு வகையாக பிரித்துக் சொல்வார்கள், ஒண்ணு பக்கா காங்கிரஸ், இன்னொன்று சொக்கா காங்கிரஸ்,

பக்கா காங்கிரஸ் என்றால் சுதந்திரத்திற்காக போராடியவர்கள்,தேசிய உணர்வு மிக்கவர்கள், சொக்கா காங்கிரஸ் என்றால் பதவிக்காக வந்த பந்தாகாரர்கள், எனவே சொக்கா காங்கிரஸ் காரர்கள் பேசியதைப் பற்றி நான் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டேன், அவர்கள் அவ்வாறு பேசினால் தான் அந்தப் பதவியில் அவர்கள் ஒட்டிக் கொண்டிருக்க முடியும்.

தி.மு.க. ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது தகைசால் தமிழர் விருது சங்கரய்யா அவர்களுக்கும்,

நல்லகண்ணு அவர்களுக்கும், ஆசிரியர் கி.வீரமணி, குமரி ஆனந்தன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது, தி.மு.க. மீண்டும் வெற்றி பெற்று இருந்தால் நமது தலைவர் அவர்கள் இந்த வருட தகைசால் விருதை பாமக நிறுவனர் ஐயா ராமதாஸ் அவர்களுக்கு வழங்கலாம் என்று என்னிடம் தெரிவித்திருந்தார், நாம் வெற்றி பெற முடியாததால் அந்த வாய்ப்பு நழுவிச் சென்றுள்ளது.

நிச்சயம் விரைவில் ஆட்சி மாற்றம் ஏற்படும், நிர்வாக திறன் இல்லாத, ரீல்ஸை மட்டுமே மூலதனமாக கொண்ட இந்த மக்கள் விரோத ஆட்சி நீண்ட நாள் நீடிக்காது, நமது கட்சியினர் உற்சாகத்தோடு இருங்கள், விரைவில் உள்ளாட்சித் தேர்தல் வரவுள்ளது, அந்தத் தேர்தலையே நாம் தான் நடத்தும் அளவில் கூட ஆட்சி மாற்றம் ஏற்படும்,

இந்த ஆட்சி நீடிக்கும் ஒவ்வொரு நாளும் தமிழ்நாடு பின்னடைவை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறது என்பதை தமிழ்நாட்டு மக்கள் தற்பொழுது நன்றாக உணர்ந்துள்ளார்கள்,

தேர்தலுக்கு முன்பு அளித்த வாக்குறுதிகள் எதையுமே நிறைவேற்றவில்லை என்பதை மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்,

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சியில் பெற்ற நன்மைகளை எண்ணிப் பார்க்க தொடங்கியுள்ளனர்,

அதையெல்லாம் மறந்து வீட்டில் குழந்தைகள் சொன்னார்கள் என்பதற்காக வாக்களித்ததை எண்ணி வருந்துகிறார்கள்.

தமிழ்நாட்டு மக்கள் தான் செய்த தவறுக்கு உரிய பரிகாரத்தை நிச்சயம் வழங்குவார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே பி சங்கர், மாநில நிர்வாகிகள் கண்ணதாசன், ஜி சந்திரபோஸ், என் மருதுகணேஷ், வீ.கவி கணேசன், மாவட்டத் தலைவர் குறிஞ்சி கணேசன், பகுதி செயலாளர்கள் வை.ம. அருள்தாசன், ஏவி ஆறுமுகம், வட்ட செயலாளர்கள் வி.சதீஷ்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.